Good Food, Good Life

நெஸ்லே லங்கா பீஎல்சி செய்தி வெளியீடு
கொழும்பு: 26 ஏப்ரல் 2016

# நெஸ்லே லங்கா தலைமை அலுவலகத்தில் புத்தாண்டு கொண்டாட்டம்

நெஸ்லே நிறுவனம் தனது பணியாளர்களுடன் இணைந்து தலைமை அலுவலகத்தில் அண்மையில் புத்தாண்டுக் கொண்டாட்ட நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்களும் இதில் கலந்து கொண்டார். 'பால் பொங்கும்' நிகழ்வுடன் புத்தாண்டு கொண்டாட்டம் ஆரம்பமானதுடன், தொடர்ந்து மங்கள விளக்கு ஏற்றப்பட்டு, பாரம்பரியமான புத்தாண்டு காலையுணவு விருந்து ஆகியனவும் இடம்பெற்றன.

நன்கு அறிந்தவர்கள் அல்லது விசுவாசம் மிக்கவர்களுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் மிகவும் பிரபலமான சம்பிரதாயங்களுள் ஒன்றான 'கொடுக்கல் வாங்கல்' 'Gemi Gedara' இல் இடம்பெற்றது. 'கண்கட்டி முட்டி உடைத்தல்', 'தலையணை சண்டை', தேங்காய் துருவும் போட்டி, நெஸ்டமோல்ற்று அருந்தும் போட்டி மற்றும் 'ஊஞ்சல் ஆட்டம்' அடங்கலாக புத்தாண்டுப் போட்டிகளில் பணியாளர்கள் மிகுந்த உற்சாகத்துடன் பங்குபற்றினர்.